www.Padasalai.Net www.CBSEtips.in

12

Register No.

# காலாண்டுத் தேர்வு – 2023

மணி : 3.00

## கணக்குப்பதிவியல்

மதிப்பெண்கள் : 90

### பகுதி – அ

**1) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 2) சரியான விடையை தேர்வு செய்து குறியீட்டுடன் விடையளி.** 20 x 1 = 20

1. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள் அ) நட்டம் ஆ) ரொக்கம் இ) முதல் ஈ) இலாபம்
2. கடனாளிகள் தொடக்க இருப்பு ₹30,000, பெற்ற ரொக்கம் ₹1,00,000, கடன் விற்பனை ₹90,000 ; கடனாளிகள் இறுதி இதுருப்பு
அ) ₹30,000 ஆ) ₹1,30,000 இ) ₹40,000 ஈ) ₹20,000
3. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கின் இருப்பு காட்டுவது அ) அந்த ஆண்டில் ஏற்பட்ட நட்டம் ஆ) அந்த ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம் இ) அந்த ஆண்டின் மொத்த ரொக்கச் செலுத்தல்கள் ஈ) அந்நாளைய ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
4. ஒரு மன்றத்தில் உள்ள 500 உறுப்பினர்கள், ஆண்டு சந்தாவாக ₹100 செலுத்துகின்றனர். நடப்பாண்டில் கூடியுள்ள சந்தா இன்னமும் பெறப்படாதது ₹200 முன்கூட்டிப் பெற்ற சந்தா ₹300. வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினை கண்டறியவும். அ) ₹50,000 ஆ) ₹50,200 இ) ₹49,900 ஈ) ₹49,800
5. பின்வருவனவற்றில் எது சரியற்ற இணை? அ) எடுப்புகள் மீது வட்டி – முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும். ஆ) முதல் மீது வட்டி – முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும் இ) கடன்மீது வட்டி – முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
ஈ) இலாபப்பகிர்வு – முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.
6. எடுப்பு மீது வட்டி, முதல் மீது வட்டி மற்றும் ஊதியம் கழித்தபின் உள்ள இலாபம் ₹10,500. கீதா என்ற கூட்டாளி கழிவுக்குப்பின் உள்ள நிகர இலாபத்தில் 5% கழிவு பெற உரியவராயின் கழிவுத் தொகையைக் கண்டறியவும். அ) ₹50 ஆ) ₹150 இ) ₹550 ஈ) ₹500
7. உயர் இலாபம் பின்வரும் இரண்டிற்கும் இடையேயான வேறுபாடாகும். அ) பயன்படுத்தப்பட்ட முதல் மற்றும் சராசரி இலாபம் ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் இ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம் ஈ) நடப்பு ஆண்டின் இலாபம் மற்றும் சராசரி இலாபம்.
8. சராசரி இலாபம் ₹25,000 மற்றும் சாதாரண இலாபம் ₹15,000 ஆக இருக்கும்போது உயர் இலாபம்
அ) ₹25,000 ஆ) ₹5,000 இ) ₹10,000 ஈ) ₹15,000
9. கூட்டாளியின் புதிய இலாபப் பகிர்வைவிட பழைய இலாபப் பகிர்வு அதிகமாக இருந்தால் அவ்வேறுபாடு அழைக்கப்படுவது
அ) முதல் விகிதம் ஆ) தியாக விகிதம் இ) ஆதாய விகிதம் ஈ) இவற்றுள் எதுவுமில்லை
10. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும். அ) மறுமதிப்பீட்டு இலாபம் ஆ) பகிர்ந்தளிக்கப்படாத இலாபம் இ) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர் ஈ) முதலீட்டு மாறுபடும் நிதி
11. மறுமதிப்பீட்டின் போது, பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) இலாபம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
12. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளியாக இருந்த 'A' என்பவர் 2019, மார்ச் 31 அன்று இறந்துவிட்டார். அவருக்கு செலுத்தவேண்டிய இறுதித்தொகை ₹25,000 உடனடியாகச் செலுத்தப்படவில்லை. அது மாற்றப்படவேண்டிய கணக்கு
அ) A - ன் முதல் கணக்கு ஆ) A - ன் கடன் கணக்கு இ) A - ன் நிறைவேற்றாளர் கணக்கு ஈ) A – நிறைவேற்றாளர் கடன் கணக்கு
13. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4 : 4 : 3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகுகிறார். A மற்றும் B யின் புதிய இலாபம் அ) 4 : 3 ஆ) 3 : 4 இ) 2 : 1 ஈ) 1 : 1
14. X, Y மற்றும் Z என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 2019, ஏப்ரல் 1 அன்று X இறந்துவிட்டார். 2018 இல் இலாபம் ₹30,000 என்ற அடிப்படையில் 2019 ஆம் ஆண்டுக்குரிய இலாபத்தில் X ன் பங்கினை கண்டறியவும்
அ) ₹1,000 ஆ) ₹3,000 இ) ₹2,500 ஈ) ₹30,000
15. பாலாஜி மற்றும் கமலேஷ் கூட்டாளிகள். இலாப நட்டங்களை 2 : 1 என்ற விகிதத்தில் புகிர்ந்துகொண்டனர். அவர்கள் யோகேஷ் என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். பாலாஜி கமலேஷ் மற்றும் யோகேஷின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் 3 : 1 : 1. பாலாஜி மற்றும் கமலேஷின் தியாக விகிதத்தைக் கணக்கிடவும். அ) 1 : 3 ஆ) 3 : 1 இ) 2 : 1 ஈ) 1 : 2
16. ஒரு வியாபாரத்தின் மொத்த மூலதனம் மதிப்பு ₹2,00,000 ; சொத்துகள் ₹2,50,000 மற்றும் பொறுப்புகள் ₹1,80,000. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு அ) ₹2,00,000 ஆ) ₹70,000 இ) ₹1,30,000 ஈ) ₹30,000
17. சராசரி இலாபத்தினை மூலதனமாக்கல் முறையில் நற்பெயர் ₹2,00,000 எனில் உயர் இலாபத்தினை மூலதனமாக்கல் முறையில் கணக்கிடப்படும் நற்பெயரின் மதிப்பு............அ) ₹1,00,000 ஆ) ₹50,000 இ) ₹2,00,000 ஈ) ₹20,000
18. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவது
அ) சமமான விகிதத்தில் ஆ) முதல் விகிதத்தில் இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) ஈ) மேற்கூறிய எதுவுமில்லை
19. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு
அ) பெயரளவுக் கணக்கு ஆ) சொத்து கணக்கு ஈ) ஆள்சார்கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார்கணக்கு
20. உரிமையாளரின் சொத்துகள் ₹85,000 மற்றும் பொறுப்புகள் ₹21,000 எனில் அவருடைய முதல் தொகை?
a) ₹85,000 b) ₹1,06,000 c) ₹21,000 d) ₹64,000

### பகுதி – ஆ

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண்.30 கட்டாய வினா)** 7 x 2 = 14

21. நிலைஅறிக்கை என்றால் என்ன?
22. இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.
23. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
24. உயர் இலாபம் என்றால் என்ன?
25. பின்வருவனவற்றுள் மறுமதிப்பீட்டு கணக்கில் பற்று அல்லது வரவு வைக்கப்படுவதைத் தரவும். அ) சொத்தின் மீதான தேய்மானம் ஆ) பதிவுறா பொறுப்புகள் இ) கொடுபடவேண்டிய செலவிற்கான ஒதுக்கீடு ஈ) சொத்தின் மீதான மதிப்பேற்றம்
26. இறந்த கூட்டாளிக்கு செலுத்தவேண்டிய தொகையினை அவருடைய நிறைவேற்றாளர் கணக்கிற்கு மாற்றுவதற்குரிய குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.
27. ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு : 2014 : ₹4,000 ; 2015 : ₹3,000 ; 2016 : ₹5,000 2017 : ₹4,500 மற்றும் 2018 ₹3,500 5 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
28. 2018 ஆம் ஆண்டில் மேத்யூ என்ற கூட்டாளி எடுத்த எடுப்புகள் ₹20,000. எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 10% என கணக்கிடப்பட்டது. 2018, டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

29. இராஜா, ரோஜா மற்றும் பூஜா எனும் கூட்டாளிகள் 4 : 5 : 3 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். நிறுவனத்திலிருந்து ரோஜா என்பவர் விலகினார். புதிய இலாப விகிதத்தையும் மற்றும் ஆதாய விகிதத்தையும் கணக்கிடவும்.

30. பின்வரும் விவரங்களிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பற்று வைக்கப்படவேண்டிய அச்சு மற்றும் எழுதுபொருள் செலவைக் கணக்கிட்டு அவை 2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பில் எவ்வாறு தோன்றும் எனப்தையும் குறிப்பிடவும்.
எழுதுபொருள்களுக்கான கொடுத்த தொகை (2017–2018) ₹1,500
எழுதுபொருள்கள் இருப்பு (ஏப்ரல் 1, 2017) ₹300
எழுதுபொருள்கள் இருப்பு (மார்ச் 31, 2018) ₹ 200

பகுதி – இ

**III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண்.40 கட்டாய வினா)** 7 x 3 = 21

31. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் கண்டறியவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 31.3.2019 அன்று இறுதி முதல் | 1,90,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 50,000 |
| அவ்வாண்டின் எடுப்புகள் | 30,000 |
| 1.4.2018 அன்று தொடக்கமுதல் | ? |
| 31.3.2019 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நட்டம் | 40,000 |

32. சேலம் விளையாட்டு மன்றத்தின் 2019, ஏப்ரல் 1 அன்றைய முதல்நிதியைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| விளையாட்டு உபகரணங்கள் | 3,000 | பரிசு நிதி | 10,000 |
| கணிப்பொறி | 25,000 | பரிசு நிதி முதலீடுகள் | 10,000 |
| 2018-19 ஆம் ஆண்டில் சந்தா பெறவேண்டியது | 5,000 | கை ரொக்கம் | 7,000 |
| 2019–20 ஆம் ஆண்டிற்காக முன்கூட்டிப் பெற்ற சந்தா | 8,000 | வங்கி ரொக்கம் | 21,000 |

33. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்றால் என்ன?

34. நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும் (ஏதேனும் 3)

35. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது பின்வருவனவற்றை எவ்வாறு மேற்கொள்வீர்கள்?
i) ஆகாஷ் என்பவர் அதிக முதல் வழங்கியுள்ளார். அவர் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 10% கோருகிறார்.
ii) பாலா ஒவ்வொரு மாதமும் ₹ 3,000 எடுத்துக்கொள்கிறார். ஏனைய கூட்டாளிகள் பாலாவிடம் ஆண்டுக்கு 8% எடுப்புகள் மீது வட்டி நிறுவனத்திற்கு அளிக்குமாறு கேட்கிறார்கள். ஆனால், பாலா அதனை ஒப்புக்கொள்ளவில்லை. iii) ஆகாஷ், இலாபத்தினை முதல் விகிதத்தில் பகிர்ந்தளிக்கவேண்டும் என்கிறார். ஆனால் பிற கூட்டாளிகள் அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

36. ஸ்ரீதேவி நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 4 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும். அ) டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளான 2016, 2017 மற்றும் 2018 ன் இலாபங்கள் முறையே ₹1,75,000, ₹1,50,000 மற்றும் ₹2,00,000 b) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழாவருமானம் ₹45,000 சேர்ந்துள்ளது. இ) 2017 ஆம் ஆண்டின் இறுதிச் சரக்கிருப்பு ₹30,000 அதிகமாக மதிப்பிடப்பட்டது.

37. கூட்டாளி சேர்ப்பின்போது மேற்கொள்ளவேண்டிய சரிகட்டுதல்கள் யாவை?

38. தியாகவிகிதத்திற்கும் ஆதாயவிகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 3)

39. ஜனனி, ஜானகி மற்றும் ஜமுனா என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்கள் மற்றும் நட்டங்களை முறையே 3 : 3 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2017 டிசம்பர் 31 அன்று ஜானகி இறந்துவிட்டார். அவருக்குச் செலுத்தவேண்டிய தொகை ₹1,40,000 என வரவிருப்பைக் காட்டியது. கீழ்க்கண்ட நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். அ) செலுத்தவேண்டிய தொகை காசோலை மூலம் உடனடியாகச் செலுத்தப்பட்டது. ஆ) செலுத்தவேண்டிய தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை.
இ) உடனடியாக ₹75,000 காசோலை மூலம் செலுத்தப்பட்டது. மீதித்தொகை இன்னும் செலுத்தப்பட வேண்டி உள்ளது.

40. பின்வரும் விவரங்கள் ஒரு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிமவடையும் ஆண்டிற்குரிய பெறுதல்கள் செலுத்தல்கள் கணக்கு

| ப பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | வ ₹ |
|---|---|---|---|---|
| சந்தா | | | | |
| 2017-2018 | 10,000 | | | |
| 2018-2019 | 50,000 | | | |
| 2019-2020 | 5,000 | 65,000 | | |

மன்றத்தில் உள்ள 200 உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஆண்டு சந்தாவாக ₹ 400 செலுத்துகின்றனர். 2017–2018 ஆம் ஆண்டில் இன்னும் பெறவேண்டிய சந்தா ₹ 2,000.

பகுதி – ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 7 x 5 = 35

41. அ) டேவிட் முறையான கணக்கேடுகளைப் பராமரிக்கவில்லை. அ வருடைய ஏடுகளிலிருந்து தரப்பட்டுள்ள விவரங்கள் பின்வருமாறு :

| விவரம் | 1.4.2018 ₹ | 31.3.2019 ₹ |
|---|---|---|
| ரொக்கம் | 43,000 | 29,000 |
| சரக்கிருப்பு | 1,20,000 | 1,30,000 |
| பற்பல கடனாளிகள் | 84,000 | 1,10,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,05,000 | 1,02,000 |
| கடன் | 25,000 | 20,000 |
| வணிக வளாகம் | 2,50,000 | 2,50,000 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| அறைகலன் | 33,000 | 45,000 |

அவ்வாண்டில் அவர் கூடுதல் முதலாக ₹ 45,000 கொண்டு வந்தார். தன்னுடைய வியாபாரத்திலிருந்து சொந்த பயனுடக்காக ₹2,500 ஒவ்வொரு மாதமும் எடுத்துக்கொண்டார். மேற்கண்ட விவரங்களைக் கொண்டு இலாபநட்ட அறிக்கையை தயார் செய்யவும்.

**(அல்லது)**

ஆ) இராகேஷ் என்பவரின் பின்வரும் விவரங்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | 31.3.2018 ₹ | 31.3.2019 ₹ |
|---|---|---|
| சரக்கிருப்பு | 2,20,000 | 1,60,000 |
| கடனாளிகள் | 5,30,000 | 6,40,000 |
| வங்கி ரொக்கம் | 60,000 | 10,000 |
| இயந்திரம் | 80,000 | 80,000 |
| பற்பல கடனீந்தோர் | 3,70,000 | 4,20,000 |

**பிற தகவல்கள் :**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| வாடகை செலுத்தியது | 1,20,000 | கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 12,50,000 |
| பெற்ற தள்ளுபடி | 35,000 | எடுப்புகள் | 1,00,000 |
| அளித்த தள்ளுபடி | 25,000 | மொத்த விற்பனை | 14,05,000 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 11,00,000 | 1.4.2018 அன்று முதல் | 5,20,000 |

42. அ) இரட்டைப்பதிவு முறை மற்றும் முழுமைபெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை? **(அல்லது)**

ஆ) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும் வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

43. அ) கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து மதுரை அன்னை தெரசா மகளிர் மன்றத்தின் 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| ரொக்க இருப்பு (1.1.2018) | 2,000 | தீக்காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 1,500 |
| வங்கி இருப்பு (1.1.2018) | 3,000 | சந்தா பெற்றது | 8,500 |
| பழைய செய்தித்தாள்கள் விற்றது | 500 | அறைகலன் வாங்கியது | 6,000 |
| எழுதுபொருள்கள் வாங்கியது | 6,000 | செய்தித்தாள்கள் வாங்கியது | 700 |
| தணிக்கைக் கட்டணம் செலுத்தியது | 2,000 | அறைகலன் மீதான தேய்மானம் | 900 |
| நுழைவுக்கட்டணம் பெற்றது | 3,000 | ரொக்க இருப்பு (31.12.2018) | 2,500 |
| பல்வகைச் செலவுகள் | 6,000 | போக்குவரத்துச் செலவுகள் | 1,000 |
| உதவித்தொகை அளித்தது | 2,000 | அறைகலன் விற்றது | 4,000 |
| முதலீடுகள் மீதான வட்டி | 2,000 | | |

**(அல்லது)**

ஆ) நண்பர்கள் கால்பந்து மன்றத்தின் 31.03.2017 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 31.03.2017 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

நண்பர்கள் கால்பந்து மன்றத்தின் ஏடுகளில்

**2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு**

| ப பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ | வ ₹ |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | அறைகலன் | | 7,000 |
| ரொக்கம் | 1,000 | | விளையாடுப் பொருள்கள் வாங்கியது | | 800 |
| வங்கி | 10,000 | | சிறப்பு விருந்துக்கான செலவுகள் | | 1,500 |
| | | 11,000 | மின்கட்டணம் | | 900 |
| சந்தா | | 5,000 | இருப்பு கீ/இ | | |
| உயில்கொடை | | 6,000 | கை ரொக்கம் | 1,800 | |
| சிறப்பு விருந்து கட்டண வசூல் | | 2,000 | வங்கி ரொக்கம் | 12,000 | 13,800 |
| | | 24,000 | | | 24,000 |

**கூடுதல் தகவல்கள் :** i) 2016, ஏப்ரல் 1 அன்று மன்றத்தில் இருந்த அறைகலன் ₹12,000. அறைகலன் மீதான தேய்மானம் கணக்கில் கொள்ளவேண்டியதில்லை. ii) 2016 - 2017 –ல் பெறவேண்டிய சந்தா ₹ 600 iii) 31.03.2017 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு ₹ 100. iv) 2016, ஏப்ரல் 1 அன்றைய முதல் நிதி ₹ 23,000.

44. அ) பின்வரும் தகவல்களிலிருந்து, மன்னன் மற்றும் சேவகன் எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளை அவர்களின் முதல் மாறுபடும் முதலாக இருக்கும்போது தயாரிக்கவும்.

| விவரம் | மன்னன் ₹ | சேவகன் ₹ |
|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் (வரவிருப்பு) | 20,00,000 | 1,75,000 |
| 2018 ஆம் ஆண்டின் எடுப்புகள் | 40,000 | 35,000 |
| எடுப்புகள் மீதான வட்டி | 1,000 | 500 |
| 2018 ஆம் ஆண்டின் இலாபப் பங்கு | 21,000 | 16,500 |
| முதல் மீது வட்டி | 12,000 | 10,500 |
| ஊதியம் | 18,000 | – |
| கழிவு | – | 2,500 |

**(அல்லது)**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஆ) அன்பு என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 12% கணக்கிடப்படுகிறது. 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு :

| நாள் | ₹ |
|---|---|
| மார்ச் 1 | 6,000 |
| ஜூன் 1 | 4,000 |
| செப்டம்பர் 1 | 5,000 |
| டிசம்பர் 1 | 2,000 |

பெருக்குத் தொகை முறையைப் பயன்படுத்தி எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

45. அ) கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு :
i) ஈட்டிய இலாபங்கள் : 2016 : ₹25,000 ; 2017 : ₹23,000 மற்றும் 2018 : ₹26,000.
ii) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹2,500 சேர்ந்துள்ளது.
iii) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ₹3,500 குறைக்கப்பட்டது.
iv) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால் எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ₹250 என மதிப்பிடப்பட்டது.
3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும். **(அல்லது)**

ஆ) பின்வரும் விவரங்களைக் கொண்டு, ஆண்டுத்தொகைமுறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
அ) பயன்படுத்தப்பட்ட முதல் : ₹50,000 ஆ) சாதாரண இலாப விகிதம் 10% இ) 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ₹13,000, ₹15,000 மற்றும் ₹17,000 ஈ) 3 ஆண்டுகளில் 10% வட்டி வீதத்தில் ₹1 ன் தற்போதைய ஆண்டுத் தொகை மதிப்பு ₹2.4868.

46. அ) ஸ்ரீராம் மற்றும் ராஜ் எனும் கூட்டாளிகள் முறையே 2 : 1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 1.4.2017 நெல்சன் என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்தனர். கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் மேற்கொள்ளப்படவேண்டும். : i) சரக்கிருப்பு மதிப்பை ₹5,000 உயர்த்தவேண்டும். ii) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள முதலீடுகள் ₹7,000 தற்போது பதிவு செய்தல் வேண்டும். iii) அலுவலக சாதனங்கள் மதிப்பை ₹10,000 குறைக்கவேண்டும். iv) கொடுபடாமலுள்ள கூலி ₹9,500 க்கு வகைசெய்யவேண்டும். குறிப்பேடு பதிவுகள் தந்து மறுமதிப்பீடு கணக்கு தயாரிக்கவும். **(அல்லது)**

ஆ) இராஜன் மற்றும் செல்வா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3 : 1 விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். அவர்களது 31–03–2017 நாளன்றைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | கட்டடம் | 25,000 |
| இராஜன் | 30,000 | | அறைகலன் | 1,000 |
| செல்வா | 16,000 | 46,000 | சரக்கிருப்பு | 20,000 |
| | | | கடனாளிகள் | 16,000 |
| பொதுக் காப்பு | | 4,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 3,000 |
| கடனீந்தோர் | | 37,500 | வங்கி ரொக்கம் | 12,500 |
| | | | இலாப நட்ட க/கு (நட்டம்) | 10,000 |
| | | 87,500 | | 87,500 |

01.04.2017 - ல் பின்வரும் நிபந்தனைகளுடன் கணேசன் என்பவர் புதிய கூட்டாளியாக சேருகிறார்.
i) கணேசன் 1/5 இலாபப் பங்கிற்கென ₹ 10,000 முதல் கொண்டுவருகிறார்.
ii) சரக்கிருப்பு மற்றும் அறைகலன் மதிப்பில் 10%, குறைத்து மதிப்பிடப்படுகிறது. கடனாளிகள் மீது 5% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்படுகிறது. iii) கட்டடத்தின் மீது 20% மதிப்பேற்றம் செய்யப்படுகிறது. மறுமதிப்பீட்டுக் கணக்கு புதிய கூட்டாளி சேர்க்கைக்கு பின் உள்ள கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும் இருப்பு நிலைக்குறிப்பு தயார் செய்யவும்.

47. அ) மணி, ரமா மற்றும் தேவன் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். தங்கள் இலாப நட்டங்களை முறையே 4 : 3 : 3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் : | | | கட்டடம் | 80,000 |
| மணி | 50,000 | | சரக்கிருப்பு | 20,000 |
| ரமா | 50,000 | | அறைகலன் | 70,000 |
| தேவன் | 50,000 | | கடனாளிகள் | 20,000 |
| | | 1,50,000 | கைரொக்கம் | 10,000 |
| பற்பல கடனீந்தோர் | | 20,000 | | |
| இலாப நட்டக் க/கு | | 30,000 | | |
| | | 2,00,000 | | 2,00,000 |

பின்வரும் சரிகட்டுதல்களுக்குட்பட்டு மணி 31.03.2019 அன்று கூட்டாண்மையிலிருந்து விலகுகிறார்.
i) சரக்கிருப்பில் ₹ 5,000 மதிப்பு குறைக்கப்படவேண்டும். iii) வாரா ஐயக்கடனுக்கு ₹ 1,000 ஒதுக்கு உருவாக்கவேண்டும். iii)கட்டடத்தின் மதிப்பு ₹ 16,000 அதிகரிக்கப்படவேண்டும். iv) மணிக்குச் சேரவேண்டியத் தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை.
மறுமதிப்பீட்டு கணக்கு மற்றும் கூட்டாளி விலகலுக்குப் பின் உள்ள முதல் கணக்கினைத் தயாரிக்கவும். **(அல்லது)**

ஆ) இராணி, ஜெயா மற்றும் ரதி என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 2 : 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 31.3.2018 அன்று ரதி என்பவர் கூட்டாண்மையைவிட்டு விலகினார். முந்தைய ஆண்டுகளின் இலாபம் பின்வருமாறு : 2014 : ₹ 10,000 ; 2015 : ₹ 20,000 ; 2016 : ₹ 18,000 மற்றும் 2017 : ₹ 32,000 . 2018 ஆம் ஆண்டில் கூட்டாளி விலகல் நாள் வரையிலான இலாபத்தில் ரதிக்குரிய இலாபப் பங்கினை கீழ்க்கண்ட நிலைகளில் தயாரிக்கவும். அ) இலாபம் முந்தைய ஆண்டுகளின் இலாபத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுவதாக இருந்தால் ஆ) இலாபம் கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி இலாபத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுவதாக இருந்தால், மேலும் மாறுபடும் முதல் முறை எனக்கொண்டு, தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com